**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 94 of 2026**

**Prosecution Witness : PW4**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **: ஸ்ரீதர்** | **Taluk** | **:** |
| **Father's Name** | **:** | **Calling** | **:** |
| **Village** | **:** | **Age** | **:** |

**(Accused Present)**

**Dated.24.06.2026**

**முதல் விசாரணை**

நான் திருவெறும்பூர் மது அமலாக்கப்பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான காவல் ஆய்வாளர் ஞானசேகர் என்பவருடைய கையொப்பம் நன்கு பரிட்சயம் பெற்றதால் ஆவணங்களின் அடிப்படையில் அவருக்காக சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 09.08.2025 ம் தேதி நிலைய குற்ற எண். 225/2025, U/s. 4(1)(C) TNP (Amendment) Act 2024 ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் ஞானசேகரர் என்பவருடைய பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. அவர் வழக்கு கோப்பினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு பட்டியல் சாட்சிகளான 1 முதல் 3 வரை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சாட்சிகளின் விசாரணையிலிருந்து சம்பவம் உண்மை என தெரிந்ததாலும், எதிரியின் மீதான குற்றத்திற்கு போதிய ஆதாரம்

இருந்ததாலும், எதிரியின் மீது U/s. 4(1)(C) TNP (Amendment) Act 2024ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். வழக்கு சாட்சிகளை நேரடியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் மீது காவல் நிலையத்திலேயே ஆவணங்கள் தயார் செய்து பொய்யாக குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், எதிரியிடமிருந்து எந்த அரசு மதுபான பாட்டில்களும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல.

ஒப்பம்/-சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/

ARUNACHALAM

Digitally signed by ARUNACHALAM
Date: 2026.06.24 11:42:57 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி